**மாவட்ட அமர்வு நீதிமன்றம், நாகப்பட்டினம்**

முன்னிலை: திருமதி. ஜி.எம். வசந்தி, எம்.எல்.,

முழுக் கூடுதல் பொறுப்பு மாவட்ட அமர்வு நீதிபதி, நாகப்பட்டினம்

(மகளிர் விரைவு அமர்வு நீதிபதி)

**2026ம் ஆண்டு ஜூன் மாதம் 04ம் நாள்** - வியாழக்**கிழமை**

திருவள்ளுவராண்டு 2057 பராபவ வருடம் வைகாசி 21-ம் நாள்

**கு.ப.ம.எண். 431/2026**

அந்தோணி ஜெயராஜ், த/பெ ஜான்பிரிட்டோ ..... மனுதாரர்/ எதிரி

-எதிர்-

காவல் ஆய்வாளர்,
கீழையூர் காவல்நிலையம்,
குற்ற எண் 127/2026 ......எதிர்மனுதாரர்

இம்மனு என் முன்பாக இன்று (04.06.2026) விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பு சட்ட உதவி பாதுகாப்பு ஆலோசகர் திரு. டி. கார்த்திகேயன் மற்றும் எதிர்மனுதாரர்தரப்பு அரசு வழக்குரைஞர் திரு. ஆர். செல்வராஜ் ஆகியோர் ஆஜராகி எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், ஆவணங்களை பரிசீலித்தும் இந்நீதிமன்றம் வழங்கும்.....

**//உத்தரவு//**

இம்மனு எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள குற்ற எண். 127/2026-ல் சட்டப்பிரிவு 194 BNSS @ ச/பி. 105 BNSன் கீழான குற்றத்திற்காக கைது செய்யப்பட்டுள்ள மனுதாரர்/குற்றம் சாட்டப்பட்டவர்களால் பிணை கோரி பிரிவு 483 BNSS ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் மனுதாரர் நிரபராதி என்றும், மனுதாரர் மீது பொய் வழக்கு புனையப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் கடந்த 29.05.2026 அன்று கைது செய்யப்பட்டு 07 நாட்களாக நீதிமன்றக்காவலில் உள்ளார் என்றும், மனுதாரருக்கு ஜாமீன் வழங்கி உத்தரவிடவேண்டும் என்று கோரினார்.

3. அரசுத்தரப்பு கற்றறிந்த அரசு வழக்கறிஞர் தனது வாதத்தில் கடந்த 28.05.2026ம் தேதி மதியம் எதிரியானவர் குடிபோதையில் வீட்டுக்கு வந்ததாகவும், புகார்தாரரின் கணவர் மற்றும் எதிரியின் தகப்பனாரான ஜான்பிரிட்டோ எதிரியைப் பார்த்து, "பகலிலே குடிக்கிற" என சத்தம்போட்டு சுத்தியால் அடித்ததாகவும், அதனால் எதிரி புகார்தாரரின் கணவரை தள்ளிவிட்டதால் தலையில் ஏற்பட்ட காயத்தின் விளைவாக புகார்தாரரின் கணவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார் என்றும், வழக்கு புலன்விசாரணை நிலுவையில் உள்ளது என்றும், எனவே எதிரியை பிணையில்விட்டால்

வழக்கின் சாட்சிகளை கலைக்கக்கூடும் என்றும் வாதிட்டு, எதிரியை பிணையில்விட கடும் ஆட்சேபனை தெரிவித்தார்.

4. இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர் மீது சட்டப்பிரிவு 194 BNSS @ ச/பி. 105 BNSன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இது ஒரு கொலை வழக்காகும். கடந்த 28.05.2026ம் தேதி மதியம் எதிரியானவர் குடிபோதையில் வீட்டுக்கு வந்தபோது, புகார்தாரரின் கணவர் மற்றும் எதிரியின் தகப்பனாரான ஜான்பிரிட்டோ எதிரியைப் பார்த்து, "பகலிலே குடிக்கிற" என சத்தம்போட்டு சுத்தியால் அடித்தும், அதனால் எதிரி புகார்தாரரின் கணவரை தள்ளிவிட்டதால் தலையில் ஏற்பட்ட காயத்தின் விளைவாக புகார்தாரரின் கணவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். மேற்படி வழக்கில் 29.05.2026 அன்று மனுதாரர் கைது செய்யப்பட்டு நீதிமன்றக்காவலில் உள்ளார். மனுதாரருக்கு ஜாமீன் வழங்கினால், அவர் சாட்சிகளை மிரட்டவோ அல்லது திசைத்திருப்பவோ அல்லது மீண்டும் இதுபோன்ற குற்றச்செயலில் ஈடுபடவும் வாய்ப்புள்ளது. வழக்கின் புலன் விசாரணை இன்னும் முடிவடையாமல் நிலுவையில் உள்ளது. எனவே குற்றத்தின் சூழ்நிலைகள் மற்றும் தீவிரத்தன்மையை (Gravity of the offense) கருத்தில்கொண்டு, இந்த மனுவை நீதிமன்றம் **தள்ளுபடி** செய்து உத்தரவிடுகிறது.

முடிவில் இம்மனு **தள்ளுபடி** செய்யப்படுகிறது.

இன்று (04.06.2026) திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/- ஜி.எம். வசந்தி,
மாவட்ட அமர்வு நீதிபதி (முகூபொ)
(மகளிர் விரைவு அமர்வு நீதிபதி)
நாகப்பட்டினம்.

நகல்

1. மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர், கீழ்வேளூர்
2. காவல் ஆய்வாளர், கீழையூர் காவல்நிலையம்
2. திரு. டி. கார்த்திகேயன், சட்ட உதவி பாதுகாப்பு ஆலோசகர், நாகப்பட்டினம்.